ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1395/15 - 2005 ජූනි 01 වැනි බදාදා - 2005.06.01

1395/15 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ - 21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

21 ஆம் பிரிவின் கீழான கட்டளை

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் இக்கட்டளையின் மூலம்,

(அ) அறிவியலும் தொழில்நுட்பவியலும், கணனி அறிவியலும் தொழில்நுட்பவியலும், முகாமைத்துவ அறிவியல்கள், விலங்கின அறிவியல் அத்துடன் ஏற்றுமதிக் கமத்தொழில் ஆகிய கற்கைப் பிரிவுகளில் உயர் கல்வியை வழங்குதல், ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்கு 2005.06.01 ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழகமொன்றைத் தாபிக்கின்றேன் ;

(ஆ) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு “இலங்கை ஊவா வெள்ளஸ்ஸ பல்கலைக்கழகம்” என்ற பெயர் மகுடத்தைக் குறித்தொதுக்குகின்றேன் ;

(இ) பதுளை நிர்வாக மாவட்டத்திற்குள் அத்தகைய பல்கலைக்கழகத்தின் மூலவிடமாக இருக்கவேண்டிய அமைவிடத்தைக் குறித்துரைக்கின்றேன் ;

(ஈ) பல்கலைக்கழகம் தெரிவுசெய்யப்பட்ட கற்கைத் துறைகளில் தனித்துவம் பெறுதலை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புடன் நன்கு நிலைநாட்டப்பட்ட பொதுக் கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் குறிக்கோளுடன் பரந்தளவிலான கற்கைத் துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகளை அபிவிருத்தி செய்யவேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன் ;

(உ) பல்கலைக்கழகம் உள்ளூர் வளத்துறையின் தளத்திற்குள் விழுமியத்தை உருவாக்குதல் பற்றி மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவது தொடர்பாக கூடுதலாக வலியுறுத்தவேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன் ; அத்துடன்

(ஊ) அத்தகைய பல்கலைக்கழகம், இதற்கான அட்டவணையின் நிரல் I மற்றும் நிரல் II இல்தரப்பட்ட துறைகள் மற்றும் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்.

**அட்டவணை**

| *நிரல் I* *துறைகள்* | *நிரல் II* *பகுதிகள்* |
|---|---|
| 1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை | 1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பகுதி<br>2. கணனி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பகுதி |
| 2. முகாமைத்துவத்துறை | 1. முகாமைத்துவ அறிவியல்கள் பகுதி<br>2. பொது நிர்வாகப் பகுதி |
| 3. விலங்கின அறிவியல் மற்றும் ஏற்றுமதி கமத்தொழில் துறை | 1. விலங்கின அறிவியல் பகுதி<br>2. ஏற்றுமதி கமத்தொழில் பகுதி. |

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005, மே 26.

6-304